முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1430

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.08.2023**, செவ்வாய்கிழமை

1. ஞான பிரம்மமே அரங்கா வாழ்க
ஞான சூட்சுமமே தேசிகா வாழ்க
ஞானபண்டிதன் என் அவதாரமே ஞானியே வாழ்க வாழ்க
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. நாட்டிடுவேன் சுப்ரமணியர் யானும்
ஞான தேசிகனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 12 ம் நாள், 29.08.2023 செவ்வாய்கிழமை)
வானவர்கள் மெச்சும் வள்ளல் நீ வையகம் காக்கும் தர்மன் நீ
தானதர்ம பலத்தை உலகமெல்லாம் தனித்துவமாக வளர்க்கும் மாதவசி நீ
3. தவசியே தர்மனே உந்தனுக்கு
தக்கபடி ஆறுமுகன் துணையாய் நின்று
அவனியில் பேராற்றல் கூட்டி அனுதினம்
அழியாமை தரும் மகா வரத்தை வழங்கி வருகின்றேன்
4. வருகவே அரங்கனே கலியின்
வல்லமைகொண்ட மாதவசியாகும்
பெருமைமிக்க அரங்கனே இந்த கலியுகத்தின்
பேரிடரையே வெல்லும் மகா யோகியாகும்
5. ஆகவே அரங்கன் பொற்பாதம்
அன்பர்கள் அடிபணிந்து இனிதே
வரம் கேட்டு நாளும் நாளும்
வணங்கி தீட்சையாக என் சடாட்சர தீட்சை
6. தீட்சைபெற்று உலகோர் தொடர் ஜெபம்
தேசமெல்லாம் சரவண ஜோதி ஏற்றி
நேசமுடன் தர்மத்தை செய்துகொண்டு
நிலவுலகில் அரங்கன் புகழை பாடினால் போதும்

7. அப்பனே உலகமெல்லாம் அரங்கன் மயமாகி
உண்மைபட ஆறுமுகன் அதனுள் இறங்கி
பெருமைபட உலகத்தை மாற்றுவேன்
பேருலகமெல்லாம் ஞானவான்களுக்கே தலைமை வாய்ப்புத்தந்து

8. தந்துமே எல்லா உலகிலும் தக்கபடி தர்மவான்கள் ஆள
ஞான ஆட்சி அரங்கன் தேடுகின்ற
ஞானிகள் ஆட்சியையும் ஞானசித்தர் காலத்தையும்
நன்மைபட ஆறுமுகன் யான் உருவாக்கி ஆற்றல்பட மாற்றம் புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–